DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**CC.No.34/2023**

**2025-ம் ஆண்டு மார்ச் திங்கள் 21- ம் நாள் வெள்ளிக்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா.11 -வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு.முத்துக்குமார் நகல் பரிசோதகர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 11 | தொழில் | - | மருத்துவர் |
| பெயர் | - | அன்னபூரணி | வட்டம் | - | கேரளா மாநிலம் |
| க/பெ | - | ராஷ்மின் | சமயம் | - | |
| கிராமம் | - | திருச்சூர் கேரளா | வயது | - | 32/2025 |
| சாதி | - | | | | |

**21-03-2025**

**( எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை:**

நான் தற்போது கேரளா மாநிலம் திருச்சூர் மாவட்டம் கொடுங்கல்லூர்ரில் தனியார் மருத்துவமனையில் மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 24-05-2023-ம் தேதி நான் வால்பாறை அரசு மருத்துவமனையில் மருத்துவராக பணியில் இருந்தபோது இரவு 07.20 மணிக்கு சுப்பிரமணியன் வயது 49, த/பெ. ராவுதர் என்பவர் சிகிச்சைக்காக வந்தார். நான் அவரை விசாரித்தபோது 24-05-2023-ம் தேதி பகல் 03.00 மணியளவில் சங்கிலிரோடு, பேக்டரி டிவிசன் வால்பாறையில் உள்ள தன் வீட்டு அருகே தெரிந்த ஒரு நபர் கத்தியால் தனது வலது கை புஜத்தில் வெட்டி காயம் ஏற்பட்டதாக கூறினார். அவர் டாட்டா மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை பெற்று வால்பாறை அரசு மருத்துவமனைக்கு வந்தார். நான் அவரை பரிசோதித்தபோது வலது கையில் 4x2x2 செ.மீ அளவிலான கிழிந்த காயம் காணப்பட்டது. மேற்படி காயத்தை சுற்றி வீக்கம் காணப்பட்டது. அந்த காயத்தை சுற்றி ரத்தக்கசிவு காணப்பட்டது. அவருக்கு சிகிச்சை அளித்து 13-06-2023-ம் தேதி அவரை மீண்டும் பரிசோதனை செய்து அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என சான்று வழங்கினேன். **(நான் அவருக்கு வழங்கிய விபத்து பதிவேடு அ.சா.ஆ.5 ஆகவும், காயச்சான்று அ.சா.ஆ.6 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது)**காயம்பட்ட நபர் அவர் சொன்ன விதத்தில் மேற்படி காயம் ஏற்பட வாய்ப்புள்ளது. போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

காயம்பட்ட நபர் எ ந்த தேதியில் எத்தனை மணிக்கு மருத்துவமனை வந்தார் என்றால் 24-05-2023-ம் தேதி 07.20 P.M மணிக்கு வந்தார். காயம்பட்ட நபர் மருத்துவமனைக்கு வரும்போதே ரத்தக்காயத்துடன் வந்தாரா என்றால் இல்லை. டாட்டா எஸ்டேட் மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை பெற்று பின்பு வந்தார். ஒரு நபர் மழைக்காலத்தில் நடந்து வரும்போது வலிக்கி விழும்போது கவாத்து வெட்டிய கூர்மையான தேயிலை குச்சியில் விழும்போது மேற்படி காயம் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரியல்ல. அவ்வாறு தேயிலை செடியின் மீது விழுந்திருந்தால் பல காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>** :இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி. N.மீனாட்சி,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.